07.08.2025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

<u>அசல் வழக்கு எண்.**49/2023**</u>

**2025**–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய வா.சா.**2–**வது நபரின் வாக்குமூலம் **1969**–ம் ஆண்டு 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி <u>திருமதி.**K.**காயத்ரி</u> என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காளிதாஸ் | த/பெ. | செல்லமுத்து |
| கிராமம் | காளிப்பட்டி | தாலுக்கா | |
| தொழில் | | சமூகம் | |
| வயது | 73 | நாள் | **07.08.2025** |

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். வாதி என் மனைவி தனத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொன்னவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

07.08.2025



**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அங்கம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். அங்கம்மாளின் கணவர் தான் பனையடியான் ஆவார். வழக்கு சொத்தை பொறுத்து பனையடியானும், அவரது வாரிசுகளும் பாகம் பிரித்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வாதி தனத்துடன் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 13.06.1982 ஆகும். இவ்வழக்கில் என் மனைவி வாதி தனம் என்ன கட்சி செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. பனையடியானின் வாரிசுகள் சொத்து பிரித்து கொண்ட வகையில் பிரதிவாதி செல்வராணி தகப்பனார் பெரியசாமிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து வாதி என்னுடைய மனைவி தாயாருக்கு பாத்தியப்பட்டது என நான் சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. என் மனைவியின் தாயார் வழக்கு சொத்து சம்மந்தமாக என்ன பரிகாரம் கோரி வழக்கு எண்.14/1999 தாக்கல் செய்துள்ளார் என்றால் சித்ரா

என்பவர் மாமியாரை பராமரிக்காததால் தான் ஜீவனாம்சம் வேண்டி தான் வழக்கு தாக்கல் செய்தார். பிரதிவாதியின் தகப்பனார் பெரியசாமி அங்கம்மாளுக்கு ஜீவனாம்சம் செலுத்தவில்லை என்பதால் தான் தாவா சொத்தை அங்கம்மாளுக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான், 3 ல் 1 பாகம் கொடுக்கப்பட்டது. அங்கம்மாளுக்கு ஜீவனாம்சமாக கொடுக்கப்பட்ட சொத்து அவருடைய ஆயுட்காலம் வரை அனுபவம் செய்து கொள்ள மட்டும் தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அங்கம்மாளுக்கு ஜீவனாம்சமாக கொடுக்கப்பட்ட சொத்து விற்பதற்கும், வாங்குவதற்கும் சுதந்திரமாக கொடுக்கப்பட்ட சொத்தாகும். அவ்வாறு நீதிமன்ற தீர்ப்பின் படி அங்கம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து விற்பதற்கும், வாங்குவதற்கும் சுதந்திரமாக என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சொன்னது போன்ற தீர்ப்பாணை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

07.08.2025



என் மனைவி வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சித்ராவின் பாகத்தில் நெல் விவசாயம் செய்துள்ளார், அதனை அறுவடை செய்வதற்காக டிராக்டரை எடுத்துக்கொண்டு போனார், அனுபவம் செய்வதை இடையூறு செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இருதரப்பு வழக்கறிஞரும் கட்டுப்பாடின்றி பேசிக்கொண்டதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.